DEPOSITION OF WITNESS
(Chapter Code of Civil Procedure)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF BODINAYAKANUR
**O.S.No. 117/2023 C/W OS.No.154/2023**

Deposition of Witness: DW1.

| | | | |
|---|---|---|---|
| Name | அசோக்குமார் | Father Name – | நந்தகோபால் |
| Age | 39 | Village – | டொம்புச்சேரி |
| | | Taluk – | போடிநாயக்கனூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 09.01.2026.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை.**

நான் 12 வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரியும். இந்த வழக்கில் வாதி வினோதமணி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் வழக்குரை சொத்து பொது இடம் என கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கில் நாங்கள் என்ன எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் வழக்குரை சொத்தை மீட்டு கொடுக்க வேண்டும் என எதிர்வாதம் செய்து வருகிறோம். வாதி வினோதமணி தாக்கல் செய்துள்ள வழக்கில் உள்ள வழக்குரை சொத்தை மீட்டு கொடுக்கும்படி வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் பத்திரத்தின் அடிப்படையில் எனக்கு பாத்தியப்பட்ட நிலங்களை மீட்டு கொடுக்க வழக்கு தாக்கல் செய்துள்ளேன். எனக்கு பாத்தியப்பட்டதாக நான் எதிர்வாதம் செய்து வரும் நிலங்கள் எனக்கு எந்த ஆவணங்களின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்றால் 1961ம் வருட தானபத்திரம் மற்றும் 1966ம் வருட கிரைய பத்திரத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன்.

2. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி உள்ள சொத்தின் கிழ மேல் அளவுகள் என்ன என்றால் முதல் தாக்கில் 27-1/2 கெஜம் (1 கெஜம் என்பது 3 அடி என சாட்சி சொல்கிறார்) இரண்டாவது தாக்கில் கிழமேல் அளவு 6 கெஜம் ஆகும். மொத்தமுள்ள இரண்டு தாக்குகளில் எந்த தாக்கில் பிரச்சனை உள்ளது என்றால் தெற்கு பக்கமுள்ள இரண்டாவது தாக்கில் பிரச்சனை

உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் கிழமேல் அளவாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பி.வா.சா.ஆ.4 ஆவணம் படிக்கும்படியாக இல்லை. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை என்னால் படித்து சொல்ல முடியவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.5 ஆவணம் 1961ம் வருட தானபத்திரம் மற்றும் 1966ம் வருட கிரைய பத்திரத்தின் ஆகிய இரண்டு ஆவணங்களின் அடிப்படையில் தான் இந்த ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான், ஆனால் பட்டாப்படி தான் ஆவணம் பதிவு செய்ய முடியும் என்பதால் இரண்டாவது தாக்கில் உள்ள சொத்தை பி.வா.சா.ஆ. 5 ஆவணத்தில் குறிப்பிடவில்லை. பி.வா.சா.ஆ. 5 பாகபிரிவினை பத்திரத்தில் 1961ம் வருட தானபத்திரம் மற்றும் 1966ம் வருட கிரைய பத்திரத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ. 5 ஆவணம் எழுதப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கு எந்த பகுதியில் வாதி வினோதமணி குடியிருந்து வருகிறார் என்றால் தெற்கு பகுதியில் குடியிருந்து வருகிறார். பி.வா.சா.ஆ.5 ஆவணம் ஏற்படுத்தப்பட்டபோது இருந்த பட்டாவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்லுவதுபோல் எந்த ஒரு பட்டாவையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் நான் எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல, மூல ஆவணங்களின் அடிப்படையில் தான் எதிர்வாதம் செய்து வருகிறேன். மூல ஆவணங்களை பற்றியும் அதில் உள்ள அளவீடுகள் பற்றியும் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2022ம் வருடம் வாதிக்கும் எங்களுக்கும் பிரச்சனை வந்த பின்புதான் தெரியவந்தது. அதற்குமுன்பு வரை மூல ஆவணங்களை பற்றி எனக்கோ எனது குடும்பத்தாருக்கோ எதுவும் தெரியாது என்றால் சரியல்ல, எனது தாய், தந்தைக்கு தெரியும், எனக்கு தான் தெரியாது. எனது தாய் மற்றும் தந்தையிடம் 1961ம் வருட தானபத்திரம் மற்றும்

1966ம் வருட கிரைய பத்திரத்தின் அளவீடு குறித்து கேட்டு தெரிந்து கொள்ளவில்லையா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்தபின்பு கேட்டு தெரிந்து கொண்டேன்.

4. நான் 2008ல் நானும் எனது தந்தையும் எனது சித்தப்பாவான குணாளனும் பாகப்பிரிவினை செய்தபோது இருந்த பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் கணினி பட்டா எண்.1357 தான் எனது தந்தை நந்தகோபால் பெயரிலும் எனது சித்தப்பா குணாளன் பெயரிலும் உள்ள பட்டா என்றால் சரிதான். **மேற்படி பட்டா எண்.1357 வா.சா.ஆ.13 என குறியீடு செய்யப்படுகிறது**. தற்போது வரை மேற்படி பட்டா அவர்களது பெயரில் தான் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது சித்தப்பா குணாளனிடமிருந்த நான் எந்த வருடம் சொத்தை எழுதி வாங்கினேன் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. எனது சித்தப்பாவிடமிருந்து எவ்வளவு விஸ்தீரணம் உள்ள நிலம் வாங்கினேன் என்றால் 967 சதுரடி நிலம் வாங்கினேன். எனது சித்தப்பாவிடமிருந்து 1966ம் வருட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை வாங்கினேனா என்றால் 2008ம் வருடம் ஏற்படுத்தப்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தின் அடிப்படையில் தான் கிரையம் வாங்கினேன்.

5. எனது தகப்பனாருக்கும் எனது சித்தப்பாவிற்கும் சரிசம பாகம் தான் பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரியல்ல, எனது தந்தைக்கு 1047 சதுரடியும், எனது சித்தப்பாவிற்கு 967 சதுரடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1961ம் வருட தானபத்திரம் மற்றும் 1966ம் வருட கிரைய பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஜமீன் பைமாஸ் எண்களுக்கான தற்போதைய சர்வே எண் என்ன என்பது நிரூபணம் செய்ய ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.13 ஆவணமான நத்தம் பட்டா மட்டும் தான் எனது தந்தைக்கும் எனக்கும் எனது சித்தப்பாவிற்கும் இருக்கும் ஒரே வருவாய் ஆவணம் என்றால் எனது தந்தையை கேட்டு தான் சொல்லமுடியும்.

6. மொத்த சொத்தில் ஒன்றாவது தாக்கும் இரண்டாவது தாக்கும் எந்த பக்கத்தில் உள்ளது என்றால் ஒன்றாவது தாக்கு வடக்கு பக்கத்திலும், இரண்டாவது தாக்கு தெற்கு பக்கத்திலும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 வரைபடத்தில் ஒன்றாவது தாக்கு மற்றும் இரண்டாவது தாக்கு எந்த பக்கத்தில் உள்ளது என்றால் ABCDEFGHI வரை ஒன்றாவது தாக்கு, MNOJK இரண்டாவது தாக்கு ஆகும். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 வரைபடத்தின் மூலம் நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால் OPK என்ற பகுதியை நான் என்னுடைய நிலம் என சொல்கிறேன், ஆனால் வாதி வினோதமணி அதை பொது இடம் என சொல்கிறார்.

7. வாதி வினோதமணி நீதிமன்ற ஆணையரை நியமிக்ககோரி மனு தாக்கல் செய்து அது அனுமதிக்கப்பட்டு நீதிமன்ற ஆணையர் நில அளவை செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையிலும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் தனித்தனியாக அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். வருவாய்துறை ஆவணங்களின் அடிப்படையிலும் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அடிப்படையிலும் தனித்தனியாக அளவீடு செய்யப்பட்ட போது நிலம் எந்த அமைப்பில் இருந்தது என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன்.

8. நான் எனக்கு மூல ஆவணங்களின் அடிப்படையில் பாத்தியப்பட்டதாக சொல்லக்கூடிய நிலத்தை விட கூடுதல் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்து உள்ளதாக நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை பற்றி தெரிந்து கொண்டேனா என்றால் தெரியாது. நீதிமன்ற ஆணையர் தரப்பில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்த பின்பு அந்த அறிக்கைக்கு எனது தரப்பில் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் உள்ள உண்மை தன்மையை நான் ஏற்றுக்கொண்டதால் தான் நான் நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9. நானோ எனது தகப்பனாரோ அல்லது எனது முன்னோர்களோ எங்களுக்கு பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்ட நிலம் ஸ்தலத்தில் குறைவாக உள்ளதாக எந்த முறையீடும் செய்யவில்லை என்றால் சரியல்ல, வட்டாட்சியரிடமும் மாவட்ட ஆட்சியரிடமும் மனு அளித்துள்ளோம். நான் வட்டாட்சியரிடமோ மாவட்ட ஆட்சியரிடமோ குறிப்பிட்டு எந்த தேதியில் மனு அளித்தேன் என்றால் வாதிக்கும் எனக்கும் பிரச்சனை வந்தபோது மனு அளித்தேன், தேதி சரியாக ஞாபகம் இல்லை. மேற்படி மனு யார் பெயரில் கொடுக்கப்பட்டது என்றால் நான் தான் கொடுத்தேன். எனக்கு முன்பு எனது தந்தையோ சித்தப்பாவோ முன்னோர்களோ வருவாய் அதிகாரிகளிடம் மனு எதுவும் அளிக்கவில்லை என்றால் எனக்கு தெரிந்தவரை அவர்கள் யாரும் மனு அளிக்கவில்லை. நான் கொடுத்தாக சொல்லக்கூடிய மனு நகலை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

10. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.8 ஆவணத்தின் உடன் எந்தெந்த ஆவணத்தை இணைத்துள்ளேன் என்றால் தானபத்திரம், வில்லங்க சான்றிதழ், பட்டா ஆகிய ஆவணங்களை இணைத்துள்ளேன். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் நான் இணைத்துள்ள ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணம் அசலை தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணத்தை நேரடியாக வருவாய் கோட்டாட்சியரிடம் கொடுத்தேனா அல்லது பதிவு தபால் மூலம் அனுப்பினேனா என்றால் பதிவு தபால் மூலம் தான் அனுப்பினேன். பதிவு தபால் மூலம் அனுப்பியதாக சொல்லக்கூடிய மனுவின் நகலே அல்லது பதிவு தபால் அஞ்சலக ரசீதோ ஒப்புதல் அட்டையோ இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.8 ஆவணம் இந்த வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றும், அவ்வாறு ஒரு மனுவை நான் வருவாய் கோட்டாட்சியருக்கு அளிக்கவில்லை என்றால் சரியல்ல.

11. எனக்கு சொந்தமானதாக நான் எதிர்வாதம் செய்து வரும் சொத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண்.367/35 மற்றும் 367/36 ஆகும். சர்வே

எண்.367/35 என்பது பொது வீதி என்பது எனக்கு நன்கு தெரியும் என்றால் வாதி தான் அவ்வாறு சொல்லி வருகிறார். சர்வே எண்.367/35 யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் மூல பத்திரங்களின் அடிப்படையில் இரண்டாம் தாக்காக எனக்கு பாத்தியப்பட்ட இடம், ஆனால் பட்டா தவறுதலாக தாக்கலாகி உள்ளது. வாதி வினோதமணி எத்தனை இலக்க சொத்துக்களை காண்பித்து வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

12. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் எத்தனை இலக்க சொத்துக்களை வழக்குரையில் காண்பித்துள்ளேன் என்றால் ஒரு இலக்க சொத்தை மட்டும் தான் காண்பித்துள்ளேன். எந்த சர்வே எண்ணிற்கு கட்டுப்பட்ட சொத்தை நான் காண்பித்துள்ளேன் என்றால் சர்வே எண்.367 ல் உட்பிரிவு 35–ஆ அல்லது 36 – ஆ என்பது சரியாக ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.2 வரைபடத்தில் எந்த பகுதியில் பொதுச்சுவர் உள்ளது என்றால் K என குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் பொதுச்சுவர் உள்ளது. நான் வழக்குரையில் சொல்லியுள்ள சுற்றுச்சுவர் எந்த வருடம் யாரால் கட்டப்பட்டது என்றால் எனது தந்தையால் 2006 ம் வருடம் கட்டப்பட்டது. 2006 ம் வருடம் சுற்றுச்சுவர் கட்டப்பட்டபோது எத்தனை முறை பிரச்சனை ஏற்பட்டது என்றால் 2006 ம் வருடம் கட்டும்போது பிரச்சனை ஏற்பட்டது, அப்போது ஊர்பெரியோர்கள் பேசி நாங்கள் கொஞ்சம் இடம் விட்டு சந்து ஏற்படுத்தி சுற்றுச்சுவர் கட்டிக்கொண்டோம். அதன்பின்பு 2022 ம் வருடம் வாதி வினோதமணி வீடுகட்டும்போது பிரச்சனை ஏற்பட்டது.

13. நான் வழக்கு தாக்கல் செய்யும் முன்பு 2 முதல் 6 பிரதிவாதிகளிடம் மனு எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல, மனு அளித்திருந்தேன். நான் சொல்வது போல் எந்த மனுவும் அளிக்கவில்லை எனவும் அவ்வாறு மனு அளித்திருந்தால் அதன் நடவடிக்கை குறித்து இந்நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. வாதி வினோதமணி தாக்கல் செய்துள்ள வழக்குரையில் எந்த சொத்து காட்டப்பட்டது என்று எனக்கு

தெரியுமா என்றால் தெரியாது. வாதி வினோதமணி தாக்கல் செய்துள்ள வழக்கில் நான் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல, வழக்குரை சொத்து பொது இடம் இல்லை, எங்களுடைய இடம் என எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன்.

14. சர்வே எண்.367/35 என்பது அரசு வருவாய் ஆவணங்களில் பொதுப்பாதை என பதிவாகியுள்ளது என்றும், அதனால் அதை பொறுத்து நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் சர்வே எண்.367/35 ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்த கடமைபட்டவர் என்றால் சரியல்ல. வாதி தாக்கல்செய்துள்ள அசல் வழக்கு எண்.117/2023 அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.154/2023 என்ற வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Take down by me in the open Court
and read over to the witness admited
by the witness to be correct.

MOHAMED HASHIM A
Digitally signed by MOHAMED HASHIM A
Date: 2026.01.09 17:10:12 +0530

District Munsif,
Bodinayakanur.